**கவனிக்க.–** *2016.12.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1999 - 2016 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2016.12.23

*1999 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 2320 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2321 |


**கவனிக்க.–** (i) பாலித தெவரப்பெரும மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, திசெம்பர் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தொழில் நுட்பத்தையும் சமூக சேவையையும் உயர்த்துவதற்கான கல்வி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, திசெம்பர் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) பொலன்னறுவை பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, திசெம்பர் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

காதிகள் சபையில் நிலவும் தலைவர் மற்றும் அங்கத்தவர் வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத் தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் (நீதிச்சேவை உத்தியோகத்தர்கள் தவிர) இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்ல ஒழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும், விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

காதிச் சபையின் தலைவருக்கு மாதாந்தம் 15,000 ரூபா நிரந்தரக் கொடுப்பனவாகவும், ஒவ்வொரு அமர்விற்கும் 3,750 ரூபா வீதம் மாதமொன்றிற்கு 15,000 ரூபாவிற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும் அங்கத்தவர் ஒருவருக்கு மாதாந்தம் 12,000 ரூபா நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் 2,000 ரூபா வீதம் மாதமொன்றிற்கு 8,000 ரூபாவிற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பங்கள் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதிச் சபை" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்னம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2016, திசெம்பர் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் காதிகள் சபைக்கு தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமித்தல்**

மாவட்டம் : ☐

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம் ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிரந்தர வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி : | தி | தி | | மா | மா | | வ | வ | வ | வ |

6. வயது :

7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. ----------------------------------------------
2. ----------------------------------------------
3. ----------------------------------------------
4. ----------------------------------------------
5. ----------------------------------------------

12. தொழில் தகைமைகள் :

1. ----------------------------------------------
2. ----------------------------------------------
3. ----------------------------------------------
4. ----------------------------------------------
5. ----------------------------------------------

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

| | |
|---|---|
| | |
| | |

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

15. விவாகமானவரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

16. நீர் ஒரு சட்டத்தரணியா ?

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

17. சட்டத்தரணியாயின், இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

18. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் | இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

19. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி :

| ரூபா | |
|---|---|

20. மாதாந்த வருமானம் :

| ரூபா | |
|---|---|

21. கடன்கள் இருப்பின் தொகை விபரம் :

| ரூபா | |
|---|---|

22. சென்ற பத்து (10) வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

23. நீர் வருமானவரி செலுத்துமொருவரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

24. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

25. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்கள் :

| |
|---|
| |

26. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

12-1024

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை-2016

இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் III ஆம் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாத, 35 வயதுக்குக் கூடாததுமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2017.01.23 ஆகும். சகல விண்ணப்பப்பத்திரங்களும் அத்தினத்திற்கு முன்பு “புகையிரத பொது முகாமையாளர், புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், த. பெ. இல. 355, மருதானை, கொழும்பு 10” எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்பத்திரமாவது தனிப்பட்ட பெயருக்கோ கையில் கொண்டு வந்து பாரம் கொடுத்தலோ

கூடாது. பூரணமற்ற, முறையற்ற, தேவையான தராதரங்களைக் கொண்டிராத, முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வறி வித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப் பப்பத்திரங்களைக் குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்களப் பிரதானியினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் III ஆம் தரம்.

2. **பதவியின், கடமையின் தன்மை**.- இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி/ புகையிரத என்ஜின் சாரதி (சன்டின்) பதவியினரின் கடமைகளுக்குத் துணையாக இருந்து, புகையிரத போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவிக்கு வழங்கப்பட்டுள்ள கடமை அட்டவணையின்படி கடமைகளைச் செய்தல்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- MT - 1 - 2006 (A) ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665 (அ. நி. சு. 03/ 2006 இன்படி சம்பளம் திருத்தியமைக்கப்படும்.)

4. (அ) **கல்வித் தகைமைகள்**.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் உடன் கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஒரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

(ஆ) **தொழிற் தகைமைகள்**.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் 2 1/ 2 வருடகால தொழில்நுட்ப பாடநெறியைச் சாதகமான முறையில் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) **உடற்தகுதி** :

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலேனும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையை மேற்கொள்வதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) உயரம் குறைந்தது 5 அடி 4 அங்குலமாகும்.

(iii) கண் பார்வையின் அளவு 6/ 6, 6/ 6 அளவில் தகுதிபெறல் வேண்டும்.

(ஈ) **வேறு தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் ;

(iv) பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான தராதரங்களைப் பூர்த்திசெய்தல், விண்ணப்பம் கோரல் அறிவித்தலில்/ வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று சகல வழிகளிலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேலுள்ள (04) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அழைக்கப்படும் தொகை புகையிரத பொது முகாமையாளரினால் தீர்மானிக் கப்படும். ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி பிரசித்தப்படுத்தப்படும். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைப் பூர்த்திசெய்துள்ளீராவென்றும், உடல் உளத் தகுதி உள்ளதா வெனவும் பரீசித்துப் பார்த்து விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இங்கு காத்திருப்போர் அட்டவணையில் வைத்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட மாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சை உள்ளடக்கம்** :

(i) *பரீட்சை முறை :*

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) சகல கேள்விகளுக்கும் தோற்ற முடிவது மேற்குறிப்பிட்ட (04) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழி மூலம் மாத்திரமாகும். தேர்ந்தெடுத்த மொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) *பரீட்சை விடயங்கள்.-* தொழில்நுட்ப அறிவு - காலம் : 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள் ஆகும். சித்தியடைவதற்கான குறைந்த புள்ளி 50 ஆகும்.

(iii) *விடய உள்ளடக்கம்.-* புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவியின் பொறுப்புக்களுக்கு சமமான இயந்திர உபகரணங்கள் மற்றும் அவற்றின் பாவனை சம்பந்தமான சரளமான அறிவைப் பரிசீலிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

7. **விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப் படுத்துவதற்குமான அறிவுறுத்தல்** :

(i) விண்ணப்பப்படிவத்தை ஏ-4 (துட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப் படிவம் தமது கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.)

விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக

ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். அதை புகையிரத பொது முகாமையாளரின் கணக்கு இலக்கம் 176-100129027-313 இற்கு வரவிலிடும் வகையில் நாட்டின் எப்பாகத்திலேனும் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்தி விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று அல்லது அதற்கு முதல் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழன்று விடாதவாறு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டை இணைத்து அனுப்பாத மற்றும் வேறு வழிகளில் பணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் - III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016" எனக் குறிப்பிடவும்.

(iv) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், ரூபா 2,40,360 ஆன வருடாந்த சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தரினால் அல்லது மாகாண அரச சேவையின் பதவிநிலை உத்தியோகத்தரினால் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்குவினால் அல்லது ஏனைய மத, சமய ஸ்தலத்திற்குப் பொறுப்பான மதகுருமாரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர் களின் கையொப்பத்தை தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக் களப் பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் அல்லது பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படல் தராதரங்களைப் பெற்றுள்ளதாகக் கருதப்பட மாட்டாது.

(vii) பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்பு தமது அனுமதிப்பத்திரத்தின் கையொப்பத்தை உறுதிப் படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை முன்வைக்க வேண்டியதுடன், அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(viii) விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காக வேண்டி ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(ix) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமான சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாவர். அச்சட்ட திட்டங்களை மீறுகின்றபோது விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

8. **சேவை நிபந்தனைகள்**.- III ஆம் வகுப்பு புகையிரத என்ஜின் சாரதி தரத்தின் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஒன்பது (9) மாத கால பயிற்சிக்கு உட்படுத்தப் பட்டு புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவியின் கடமைகளுக்குரிய தொழில் பயிற்சி மற்றும் கோட்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்.

9. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இன் ஏற்பாட்டின்படி அரச சேவைக்குச் சேர்ந்த மொழியைத் தவிர்ந்த மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறல் வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடு களுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்டுள்ள தாபன செயற்பாட்டு அமைப்பு நியதிகள் கோவையின் ஏற்பாடுகளுக்கும், கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும். மற்றும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும், திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும்.

10. (i) இவ்வாட்சேர்ப்பு சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் சம்பந்தமாக கடைசித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புகையிரதப் பொது முகாமையாளருக்கு உரித்தானதாகும்.

(iii) இவ்வறிவித்தலில் சிங்களம் மொழி மற்றும் தமிழ் மொழிகளில் ஏதேனும் பொருள் வேறுபாடுகள் இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தல் சரியானதெனக் கருதப்படும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2016.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களம்**

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவி - III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை-2016**

Sri Lanka Railway Department

Open Competitive Examination for Recruitment to The Post of Railway Engine Driver Assistant Grade - III of Sri Lanka Railway Department - 2016

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

1. முழுப்பெயர் :-

(i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :————.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) சிங்களத்தில்/ தமிழில் :————.

2. முதலெழுத்துடன் பெயர் :-

(i) சிங்களத்தில்/ தமிழில் :————.
(ii) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :————.
(உதா : GUNAWARDHANA, M.G.B.S.K.)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. நிரந்தர முகவரி :-

(i) சிங்களத்தில்/ தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் :————.

5. ஆண்/ பெண் தன்மை :—

பெண் - 1
ஆண் - 0 [ ]
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

6. இனத் தொகுதி :
சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, பறங்கியர்-5, மலாயர்-6 [ ]

(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

7. வதிவிடம் :

(i) கிராம அலுவலர் பிரிவு :————.

அதன் இலக்கம் :————.

(ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.

(iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :-

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

(ii) 2017.01.23 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

9. (அ) கல்வித் தராதரம் :

(i) க. பொ. த. (சா. தரம்) :

சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

(ii) தொழில் தராதரம் :----.

10. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ? :----.

11. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதேனும் பகுதிகள் பூரணப்படுத்தப்படாததால் அல்லது உடன் பிழையான முறையில் அல்லது/ உடன் பொய்யான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் எனது விண்ணப்பத்தன்மை நிராகரிக்கப்படும் என்பதையும், பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு மேற்குறிப்பிட்ட விடயம் தெரியவருமிடத்து பதவிக்கான நியமனம் இரத்துச்செய்யப்படும் என்பதையும் நான் நன்கறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்பு தெரியவருமிடத்து பதவியிலிருந்து நீக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(இ) மேலும், பரீட்சை சம்பந்தமான விடுக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) .............................. ஆந் திகதி .............................. மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 500 ஐச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

—————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :—————.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

—————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :—————.
பதவி :—————.
முகவரி :—————.
திகதி :—————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலச்சினையைப் பொறிக்கவும்.)

13. **திணைக்கள/ நிறுவன தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. .................................... அவர்கள் .............................. இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ......................... ஆந் திகதியிலிருந்து ........................ ஆக சேவை புரிகிறார். அவருக்கு எதிராக முற்றுப்பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/ இல்லை. அவரின் வேலை நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானது/ அதிருப்திகரமானது. குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டு இணைக்கப் பட்டுள்ளது. அவர் புகையிரத திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி - III ஆம் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாதென தெரிவித்துக்கொள்கிறேன்.

—————,
திணைக்கள/ நிறுவன தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :—————.
பதவி :—————.
முகவரி :—————.
திகதி :—————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலட்சினையைப் பொறிக்கவும்.)

12-858

---

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### கால்நடை தடுப்பூசித்துறை உதவியாளர் மற்றும் விலங்குப் பிரிவு கட்டுப்பாட்டாளர் (சோதனை) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2016

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள பொது சுகாதார கால்நடை மருத்துவ நிறுவனத்தில் "கால்நடை தடுப்பூசித்துறை உதவியாளர்" பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்கள் 09 மற்றும் "விலங்குப் பிரிவு கட்டுப்பாட்டாளர் (சோதனை)" பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்கள் 4 இற்கு திறந்த அடிப்படையில் நிரப்புவதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவிக்கான கல்வித் தகைமை :**

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

3. **அனுபவம் :**

(அ) *கால்நடை தடுப்பூசியாளர்.*- அரச அல்லது அரசுடன் இணைந்த அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலம் தடுப்பூசி செலுத்துதல் தொடர்பாக அனுபவம் இருத்தல் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(ஆ) *விலங்குப் பிரிவு கட்டுப்பாட்டாளர் (சோதனை).*- ஒரு வருடத்திற்குக் குறையாத காலம் சமூக தலைமைத்துவம் வகித்ததாக அல்லது மாணவ கேடட் ஆக செயற்பட்டிருப்பதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

4. **தொழிற் தகைமைகள் :**

(அ) *கால்நடை தடுப்பூசியாளர்.*- உரித்துடையதல்ல.

(ஆ) *விலங்குப் பிரிவு கட்டுப்பாட்டாளர் (சோதனை).*- நாய்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் ஒரு வருட அனுபவம் உள்ளதாக அரச அல்லது அரசுடன் இணைந்த அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

5. **வேறு பொதுத் தகைமைகள் :**

(அ) 2017.01.23 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 30 வயதிற்கு குறைந்த ஆண் விண்ணப்பதாரிகளாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் தேவையான பிரகாரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(உ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமைகளைச் செய்வதற்கும், போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து இலக்கம் 1.0 தொடக்கம் 5.1 வரை முதல் பக்கததிலும் 5.2 தொடக்கம் 8.0 வரை இரண்டாம் பக்கத்திலும் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும் ;

(ஆ) இரு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் விண்ணப்பத்தில் தெளிவாக உரிய இடத்தில் பதவிகள் இரண்டிற்கும் விருப்பத் தெரிவினைக் குறித்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் இலங்கை வங்கி, தெப்ர பிறேன், இல. 7041318 எனும் "சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு 500 ரூபா வரவு வைத்து பற்றுச்சீட்டைக் கழராதவாறு உரிய இடத்தில் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.) ;

(ஈ) அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/பிரசித்த நொத்தாரிசு/சட்டத்தரணி அல்லது முப்படைகளின் அதிகாரம்பெற்ற அதிகாரி அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யக்கூடிய பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த சம்பளம் 3,44,452 ரூபாவுக்குக் குறையாத சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவிநிலை பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் ;

(உ) முறையாகப் பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் 9" X 4" அளவினைக் கொண்ட கடிதஉறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் முனையில், ........................................... பதவிக்கு இணைத்துக்கொள்ளல் - 2016" எனக் குறிப்பிட்டு 2017.01.23 ஆந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம்) 03, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, 'சுவசிறிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

7. ஏற்கனவே அரச அல்லது அரசுடன் இணைந்த தாபனமொன்றில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் இதற்காக விண்ணப்பிப்பதாயின் அவ் உத்தியோகத்தர்களின் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இதைத் தவிர, மாதிரிப் படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் உடற்தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகளைப் பரிசீலித்துப் பார்க்கும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் தரம் III இற்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் கடிதம் மூலம் அறிவிக்கப்படுவதுடன், பெறுபேறுகளின் பட்டியல் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

10. எழுத்துப் பரீட்சை தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடயம் | காலம் | அதிகூடிய புள்ளி | சித்திபெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| (i) பொது அறிவு | உரிய துறை தொடர்பாக விண்ணப்பதாரி வெளிக் காட்டும் திறமை மற்றும் பொது அறிவைப் பரிசீலித்தல் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| (ii) நுண்ணறிவு | சொற்கள் மற்றும் உருவமாக வழங்கும் சிக்கல் தொடர்பாக விண்ணப்பதாரி வெளிப் படுத்தும் ஆற்றல் மற்றும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், குறிப் பிட்ட கால எல்லை மற்றும் சந்தர்ப்பத்திற்குள் தொடர்பை விளங்கிக்கொள்வதை விண்ணப்பதாரி கொண்டுள்ள திறமையைக் கணிப்பிடுதல் | 1 1/ 2 மணித்தியாலம் | 100 | 40% |

11. **பரீட்சார்த்திகளை உறுதிப்படுத்தல்**.- எழுத்துமூலப் பரீட்சையின்போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

12. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான காலம் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும் ;

(ii) இப்பதவி 3 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும் ;

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இன் பிரகாரம் அல்லது அதனுடன் தொடர்புள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் இப்பதவிக்கு உள்வாங்கப்பட்டு 5 வருடங்களுக்குள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும் ;

(iv) 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு - 2 சேவையின் ஆட்சேர்ப்பு விதிமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்பான காலத்துக்குக்காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம், அரச சேவை ஆணைக்குழுவின் சேவை நிபந்தனை மற்றும் அரசினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் விதிமுறைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

13. பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்ற தொகை தீர்மானிக்கப்படுவது அச்சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப ஆகும். அதன் பிரகாரம், கால்நடை தடுப்பூசித்துறை உதவியாளர் மற்றும் விலங்குப் பிரிவு கட்டுப்பாட்டாளர் (சோதனை) பதவிக்கான நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் தீர்மானித்தால் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய அப்பதவியின் III ஆம் தரத்தின் வெற்றிடங்களுக்கு அமைய நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கால்நடை தடுப்பூசித்துறை உதவியாளர் மற்றும் விலங்குப் பிரிவுக் கட்டுப்பாட்டாளர் (சோதனை) பதவிக்கான பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் பிரகாரம் MN 01 - 2016 இற்கு உரிய ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - 45,540 (மாதாந்தம்) சம்பளப் படிக்கு உரித்துடையவர் என்பதுடன், சம்பளம் வழங்குதல் அச்சுற்றறிக்கையின் உப ஆவணம் II இற்கு அமைய மேற்கொள்ளப்படும்.

14. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத, தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முறையாகப் பூரணப்படுத்தப்படாத விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் தாமதித்துக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் ஏற்படும் தாமதம் மற்றும் காணாமல் போதல் என்பவை தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

15. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய விபரங்கள் விண்ணப்பத்தை நிரப்பும்போது மிகவும் கவனத்தில் எடுத்து சரியாக உள்வாங்கப்படல் வேண்டும். நியமனம் வழங்கப்பட்ட பின்னர் தகைமைகளைப் பரிசீலிப்பதற்காகச் சமர்ப்பிக்கும்போது சான்றிதழ் பொய் அல்லது பிழையானவையெனத் தெரியவருமிடத்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்கப்படுவதுடன், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்து பதவியிறக்கம் செய்யப்படுதல் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, மீண்டும் அரச சேவைக்கு இணைய முடியாதவாறு கருப்புப்பட்டியலில் பெயர் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

16. இந்த வர்த்தமானியில் உள்ளடக்கப்படாத ஏதேனுமோர் விடயம் சம்பந்தமான இறுதித் தீர்மானம் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருடையது என்பதுடன், வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புவது தொடர்பான இறுதித் தீர்மானம் சுகாதார செயலாளருடையது.

17. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாயினுமொரு வித்தியாசம் அல்லது ஒன்றுக்கொன்று முரணாக ஏற்படுமிடத்து சிங்கள மொழியில் குறிப்பிட்டவையே செல்வாக்குடையதாகும்.

செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிறிபாய',
கொழும்பு 10,
2016, நவெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பொது சுகாதார கால்நடை நிறுவனத்தில் நிலவுகின்ற முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் தவிர்ந்த குழு 2 (MN - 01 - 2006 (A)) சேவைப் பிரிவிற்கு உரிய "கால்நடை தடுப்பூசித்துறை உதவியாளர்" மற்றும் "விலங்குப் பிரிவுக் கட்டுப்பாட்டாளர் (சோதனை)" III பதவிக்கு இணைத்துக்கொள்வதற்கான திறந்த அடிப்படையிலான போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரல் - 2016**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

பரீட்சைக்காகக் கோரும் பதவி மற்றும் விருப்புத் தெரிவு

| பதவி | விருப்பத் தெரிவு |
|---|---|
| கால்நடை தடுப்பூசித்துறை உதவியாளர் | |
| விலங்குப் பிரிவுக் கட்டுப்பாட்டாளர் (சோதனை) | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதா : A. B. C. SILVA

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(iii) வசிக்கும் மாவட்டம் :----.
(iv) தொலைபேசி இலக்கம் :----.
(v) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(i) தேசிய ஆள் அடையாள அட்டை : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்.)

5. கல்வித் தகைமைகள் (உரிய சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்) :

(i) க. பொ. த. (சா. தரம்) பரீட்சை
பரீட்சை இலக்கம் :----.
ஆண்டு :----.

| இல. | பாடம் | சித்தி | இல. | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1. | | | 5. | | |
| 2. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 4. | | | 8. | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
பரீட்சை இலக்கம் :----.
ஆண்டு :----.

| இல. | பாடம் | சித்தி |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(iii) அனுபவம் :

உண்டு ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

உரிய விபரங்களைக் குறிப்பிடவும் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்) :----.

(iv) தொழிற்தகைமைகள் (விலங்குப் பிரிவுக் கட்டுப்பாட்டாளர் சோதனை பதவிக்கான) :

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

6. நீங்கள் ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாகி உள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

7. விண்ணப்பதாரியின் உறுதிமொழி :

இவ்விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானதும் சரியானதும் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தி, பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டது எனவும் உறுதிமொழிகின்றேன். என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பிழை அல்லது தவறு எனக் கண்டுபிடிக்கப்பட்டால் இவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும், தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் எனின், நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன்.

பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.
நிழற்படப் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த திரு./ திருமதி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கறிவேன் எனவும், அவர் .......................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

12-903

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016

(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பாடநெறி இல. 1930/ 12 மற்றும் 2015.09.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் 2017, மே மாதம் வார இறுதி பாடநெறியாக 5 வாரங்கள் சனி, ஞாயிறு தினங்களில் ஆரம்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பாடநெறி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுவதுடன், பாடநெறியின் இறுதியில் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் இறுதிப் பரீட்சை நடைபெறும். அப்பெறுபேறுகளின்படி பாடநெறியில் சித்தியடைவது தொடர்பாக தீர்மானிக்கப்படுவதுடன், சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மேற்படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப் படுவர். பாடநெறிக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுத்தல், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சான்றிதழ் களை வெளியிடல் மற்றும் சலுகைக் காலம் வழங்கல் சம்பந்தமாக அப்பீடத்தின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பாடநெறியைத் தொடரும் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் தண்டனை மற்றும் தாபனக்கோவையின் ஏற்பாடுகள் என்பனவற்றுக்கும் கட்டுப் படுதல் வேண்டும்.

(ii) இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் பாடநெறியின் ஆரம்பத்தில் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

3. இப்பாடநெறி தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரி தாமாகவே விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளதுடன், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த மத்திய அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், தமது திணைக்களத்தின் தலைவர் ஊடாகவும், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த மாகாண அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், அவர்கள் சேவையாற்றுகின்ற மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும், 2017, சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடம், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை" எனும் முகவரிக்கு தனது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016 (முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)" என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எவ்வித விசாரணையுமின்றி நிராகரிப்பதற்கு பீடாதிபதிக்கு அதிகாரமுண்டு.

4. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை பாடநெறியின் ஆரம்பத்தில் அல்லது பாடநெறி கால எல்லையினுள் முன்னளித்து ஆளடை யாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

அல்லது

தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாளத்தை உறுதிசெய்யக்கூடிய ஆவணம்.

5. **விண்ணப்பம்** :

(i) ஏ4 அளவுடைய தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ள முடியுமாக இருந்தபோதிலும், அது சரியாகவும் நேர்த்தியாகவும் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தினாலேயே நிரப்பப்படல் வேண்டும். விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலர்களின் பெயர் பாடநெறியின் சகல சந்தர்ப்பங்களிலும் பயன் படுத்தப்படுவதன் காரணமாக அது தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் பாடநெறிக் காலத்தினுள் அதில் மாற்றமேற்படும் பட்சத்தில், அதுபற்றி திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் எழுத்துமூலம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு

மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத விண்ணப்பங்களும், முழுமையான தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது பற்றி விண்ணப்பதாரி பரிசோதித்துப் பார்க்க வேண்டியுள்ளதுடன், அவ்விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(iii) விண்ணப்பதாரி விண்ணப்பத்தின் வலதுபக்க மேல் மூலையில் தரப்பட்டுள்ள கூட்டினுள் தபால் முத்திரை ஒன்றின் அளவில் புகைப்படம் ஒன்றினை கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். அத்துடன், தபால் முத்திரை ஒன்றின் அளவிலான புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்துடன் (ஒட்டிவிடாது) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

6. **பாடநெறிக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் :**

(i) இப்பாடநெறியைத் தொடரவுள்ள அலுவலர்கள் 17,500 ரூபா தொகையை மக்கள் வங்கி, கங்கொடவில கிளையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின், பீடங்களுக்கான அபிவிருத்தி நிதிய நடைமுறைக் கணக்கு இல. 097100140002229 எனும் பெயருக்கு அலுவலர் பணியாற்றுகின்ற நிறுவகத்தின் மூலம் காசோலையாகவோ, வங்கி வரைவாகவோ, குறித்த விண்ணப்பதாரியினால் குறிப்பிட்ட தொகையை வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவிற்கு பாடநெறி ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதில் தாபனக் கட்டணங்கள், அச்சுக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், வளவாளர்களுக்கான கட்டணங்கள், ஒருங்கிணைப்புக் கட்டணங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன ;

(ii) எவ்வாறாயினும், ஆரம்பத்தில் பாடநெறிக்கு உரிய பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில், அதன் பின்னரான தவணைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றும்போது, 1,000 ரூபா பரீட்சைக் கட்டணமாகவும், 2,000 ரூபா ஒரு பாடத்துக்கான கட்டணமாகவும் செலுத்துதல் வேண்டும். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடாதிபதியின் ஆலோசனைகளுக்கமைய அக்கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும் ;

(iii) எச்சந்தர்ப்பத்திலும் இப்பாடநெறிக்காக அறவிடப்பட்ட தொகை மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சை அல்லது பாடநெறி தொடர்பாகவோ வேறொரு அலுவலருக்கோ மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7. **பாடநெறியைத் தொடரவேண்டிய தேவைப்பாடு :**

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து (5) ஆண்டுகளைக் கடப்பதற்கு முன்னர் சகல அலுவலர்களும் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான III ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) 2013.06.01 ஆந் திகதியளவில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து (5) ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களுக்கு III ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படும்.

**குறிப்பு**.- திணைக்களத் தலைவரினால் அந்தந்த அலுவலர்களின் சேவைமூப்பு மற்றும் 7 (i), 7 (ii) ஆம் பந்திகளின் விடயங்கள் சம்பந்தமாக அவதானம் செலுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

8. **பாடநெறிக்கு தெரிவுசெய்யும் முறை**.- இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள் அத்தரத்தில் அமர்த்தப்பட்ட சேவை மூப்பின் ஒழுங்குமுறைக்கமைய, பாடநெறி தொடர்பாக அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது முன்னுரிமை அளிக்கப்படும்.

9. விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல அலுவலர்களும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் பேணப்பட்டு வருகின்ற தரவு முறையினுள் உள்வாங்கப்படுவதுடன், ஒரு முறையில் 200 பேர்களைக் கொண்ட இரு குழுக்களாக ஆண்டுக்கு 800 பேர் இப்பாடநெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் தெரிவுசெய்யப்படும் அலுவலர்களுக்கு அது பற்றி அறிவிக்கப்படும். பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரியின் பெயர்ப்பட்டியல் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பிற்பாடு கடிதம் மூலம் குறித்த திணைக்களங்களுக்கு அமைச்சினால் அறிவிக்கப்படும். பாடநெறியில் கலந்து கொள்வோர்

போதாதுவிடின் மாத்திரம், வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் இப்பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

10. **பாடநெறி தொடர்பான பாடத்திட்டம் :**

| *தொடர் இல.* | *பாடத்திட்டம்* | *கிரடிட் எண் ணிக்கை* | *கிரடிட் மணித்தி யாலங் கள்* |
|---|---|---|---|
| 1 | அரசாங்க நிதி முகாமைத் துவம் | 2 | 30 |
| 2 | மனிதவள முகாமைத்துவம் (மூலக் கோட்பாடு) | 2 | 30 |
| 3 | பிரச்சினை தீர்த்தல் முகா மைத்துவம் (நிறுவகத்தின் நோக்கங்கள், குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் போதான பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ளும் கோட்பாடுகளின் நடை முறைப் பயன்பாடு) | 2 | 30 |
| 4 | நிறுவன நடத்தை | 2 | 30 |
| 5 | செயற்திட்ட அறிக்கை- தத்தமது தொழில்துறை சம்பந்தமாக முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினை அல்லது தொழில்துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரை | 2 | 30 |
| | | 10 | 150 |

11. இவ்வறிவித்தலின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத எவ்வித விடயம் சம்பந்தமாகவும் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016, திசெம்பர் 08.

(வர்த்தமானி அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் www. pubad.gov.lk இல் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

தபால் முத்திரை அளவிலான புகைப்படம் இங்கு ஒட்டவும்.

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016**

(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
   உதாரணம் : GUNAWARDHANA, M.G.B.S.K.
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தாங்கள் மாகாண அரசாங்க சேவை அல்லது எவ்வித அரசாங்க சேவைக்கு உட்படுகின்றீர்கள் என்பது பற்றி உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக :

   (அரசாங்க சேவை-10/மேல் மாகாண அரசாங்க சேவை-01/ மத்திய மாகாண அரசாங்க சேவை-02/ தென் மாகாண அரசாங்க சேவைக-03/வட மாகாண அரசாங்க சேவை-04/ கிழக்கு மாகாண அரசாங்க சேவை-05/ வடமேல் மாகாண அரசாங்க சேவை-06/ வடமத்திய மாகாண அரசாங்க சேவை-07/ ஊவா மாகாண அரசாங்க சேவை-08/ சப்பிரகமுவ மாகாண அரசாங்க சேவை-09)

3. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. தாங்கள் பணியாற்றுகின்ற உப திணைக்களம்/ பிரிவு (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (சிங்களத்தில்/ தமிழில்) :----.

5. தாங்கள் பணியாற்றுகின்ற திணைக்களம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (சிங்களத்தில்/ தமிழில்) :----.

6. அரசாங்க முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
   சிங்களத்தில்/ தமிழில் :----.

7. தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
   (சிங்களத்தில்/ தமிழில்) :----.

8. மின்-அஞ்சல் :----.

9. தொலைபேசி இலக்கம் :-

தனிப்பட்ட : | | | | | | | | | | |

அலுவலக : | | | | | | | | | | |

10. பால் நிலை :
ஆண்-M
பெண்-F

(குறித்த எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

11. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |

(தங்களால் உண்மைப் பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதியொன்றை இணைக்கவும்.)

12. (i) பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

(ii) தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

(iii) 2017.01.31 ஆந் திகதியன்று தரம் I இல் திருப்திகர மான சேவைக்காலம் :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

(தங்களால் உண்மைப் பிரதியென அங்கீகார ஒப்பமிடப்பட்ட I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை இணைக்கவும்.)

(iv) 2013.06.01 ஆந் திகதியில் I ஆம் தரத்தின் சேவைக் காலம் :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் சரியானவை எனவும் மேலும், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தகப் பிரிவின் பீடாதிபதி யினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும், தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுவேன் என உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில் திரு./ திருமதி/ செல்வி ................ .................... என்பவர் சேவையாற்றுகின்றார் எனவும், நான் அவரை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், .................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேலே இல. 1 இல் இருந்து 12 வரையிலான பந்திகளில் அடங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும், 7 ஆம் பந்தியின் குறிப்புக்களுக்கு அமைய அவ்விண்ணப்பதாரி இப்பாடநெறியில் கலந்து கொள்வதற்கு தகைமை பெற்ற இலங்கை தொழில்நுட்பச் சேவையைச் சேர்ந்த அலுவலர் எனவும், உரிய பாடநெறிக் கட்டணம் திணைக்களத்தினால் செலுத்தப்படும் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

**சரி பார்க்கவும் :**

(1) தங்களால் உண்மைப் பிரதியென உறுதிப் படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை யின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. ☐

(2) முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலை யில் ஒட்டப்பட்டுள்ளது. ☐

(3) முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ☐

(4) I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தில் தங்களால் உண்மைப் பிரதி யென அங்கீகார ஒப்பமிட்ட கடிதம் இணைக்கப்பட்டுள்ளது. ☐

12-1010

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.